Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.901/2025, Cr.No.120/2025, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | |
|---|---|
| பெயர் | திருநாவுக்கரசு |
| வயது | 44 |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் |
| கிராமம் | நாராயணபுரம் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | பானிபூரி கடை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 06th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பானிபூரி கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 என்னுடைய உறவினர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.09.2025 அன்று இரவு 08.00 மணியளவில் ராமச்சந்திரன் அடிப்பட்டு ரோட்டில் படுத்துக்கிடந்ததாக போன் வந்ததை அடுத்து அவரை ஆம்புலன்ஸ் மூலம்திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அவரை எதிரி சந்தோஷ் வழிப்பிரச்சனை சம்பந்தமாக அடித்ததாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.03.06 18:05:08 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.901/2025, Cr.No.120/2025, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பொன்னுசாமி |
| வயது | 62 |
| தந்தை/கணவர் பெயர் | அப்பாவுக்கவுண்டர் |
| கிராமம் | நாராயணபுரம் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 06th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.09.2025 அன்று இரவு சுமார் 08.00 மணியளவில் எதிரிக்கும் ராமனுக்கும் தகராறு ஏற்பட்டது. நான் சம்பவயிடத்தில் இல்லை. ராமனை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக கேள்விப்பட்டேன். பின்னர் 09.09.2025 அன்று மதியம் சுமார் 11.00–12.00 மணிக்கு மேல் குரிசிலாப்பட்டு போலீசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த 2–வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் மற்றொரு சாட்சி கையொப்பத்தை பெருமாள் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.03.06 18:05:15 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.901/2025, Cr.No.120/2025, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | |
|---|---|
| பெயர் | பெருமாள் பாண்டியன் |
| வயது | 21 |
| தந்தை/கணவர் பெயர் | பொன்னுசாமி |
| கிராமம் | நாராயணபுரம் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 06th day of March 2026.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக உள்ளேன். அ.சா.1–ஐ எனக்கு தெரியும். அ.சா.1 லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவிலில் பூசாரியாக உள்ளார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நானும், பட்டாபியும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட டிராக்டரில் M–Sand மணலை ஏற்றி அனுப்பி வைத்தோம். பட்டாபி டிராக்டடரை ஓட்டி வந்தார். அவருடன் நான் சென்றேன். இரவு 07.30 மணியளவில் முருகன் நிலத்தினருகே செல்லும் போது, எதிரியானவர் இவ்வழியாக செல்லக்கூடாது என்று தடுத்தார். நான் அ.சா.1–க்கு போன் மூலம் தகவல் தெரிவித்ததும் அவர் வந்து எதிரியிடம் கேட்டார். அதற்கு எதிரியானவர் "ஏன்டா தேவிடியா பையா" என்று திட்டினார். அதை நான் பார்த்தேன். அ.சா.1 ஆனவர் "நான் ஏன் வரக்கூடாது" என்று எதிரியிடம் கேட்டார். அதற்குஎதிரி அ.சா.1–ஐ கண்ணத்தின் மீது கையால் அடித்தும், இடுப்பில் காலாலும் உதைத்தார். அதனால் அ.சா.1 மயக்கமடைந்து கீழே விழுந்தார். பின்னர் நான் அவருக்கு தண்ணீர் கொடுத்தேன். பின்னர் அவரை திருநாவுக்கரசு ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்னர் 09.09.2025 அன்று மதியம் சுமார் 12.00 மணிக்கு மேல் குரிசிலாப்பட்டு போலீசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர்

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1–வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த 1–வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் மற்றொரு சாட்சி கையொப்பத்தை பொன்னுசாமி செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.03.06 18:05:23 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.901/2025, Cr.No.120/2025, Kurisilapet PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | |
|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் |
| வயது | 69 |
| தந்தை/கணவர் பெயர் | கௌரப்பன் |
| கிராமம் | மயில்பாறை |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 06th day of March 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். மேலும், எனது ஊரில் உள்ள லட்சுமி நரசிம்ம பெருமாள் கோவிலில் பூசாரியாகவும் உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.09.2025 அன்று இரவு 07.30 மணியளவில் கோவில் கட்டுவதற்காக M-Sand-ஐ டிராக்டரில் ஏற்றினோம். பின்னர் டிராக்டரை எங்கள் ஊரைச் சார்ந்த எதிரியானவர் இந்த வழியாக செல்லக்கூடாது என்று தடுத்து நிறுத்தினார் என்று பெருமாள் பாண்டி தகவல் கொடுத்தார். நான் வீட்டிலிருந்து இரவு 08.00 மணியளவில் சென்று எதிரியிடம் எதற்காக நிறுத்தினாய் என்று கேட்டபோது, எதிரி எனது கண்ணத்தின் மீது அடித்து கீழே தள்ளிவிட்டார். அதில் எனக்கு வலது கண்புருவத்தில் உள்காயம் ஏற்பட்டது. காலால் இடுப்பின் மீது உதைத்தார். பின்னர் தகவல் தெரிந்து வந்த திருநாவுக்கரசு 108 ஆம்புலன்ஸ்-மூலம் என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் அங்கு 2

நாட்கள் சிகிச்சையிலிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.03.06 18:05:31 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.